பக்கங்கள் 12+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 20 திங்கட்கிழமை 09.11.2024 | அதிர்வு 130

## கம்பஹாவில் ஒருவர் சுட்டுப் படுகொலை!

மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கம்பஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்மிட்ட வீதியில் உள்ள 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# கஜேந்திரகுமார் எம்.பியின் வாகனம் மோதி யாசகத்தில் ஈடுபட்டு வந்த பெண் உயிரிழப்பு

### கைதான சாரதி பிணையில் விடுவிப்பு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் ஜீப் வாகனம் மோதுண்டதில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

யாசகத்தில் ஈடுபட்டு வந்த 70 வயதான பெண்ணே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த ஜீப் வாகனத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் 02▶

### அரசின் தீர்மானத்துக்கு

# இணங்காவிடின் கடும் நடவடிக்கை

### ஜனாதிபதி அநுர எச்சரிக்கை



இலங்கையில் நிலவும் அரிசி தட்டுப்பாட்டை உடனடியாக நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அரிசி வர்த்தகர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

சந்தையில் அதிகரித்துள்ள அரிசி தட்டுப்பாட்டுக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற விசேட சந்திப்பில் அவர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார். 02▶

## அர்ச்சுனா எம்.பிக்கு எதிராக சத்தியமூர்த்தி முறைப்பாடு



யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தியால் இந்த முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் அனுமதியின்றி பிரவேசித்து, தமது கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததுடன், 02▶

# வவுனியாவில் முதியவரின் சடலம் மீட்பு!



(கி.வசந்தன்)

வவுனியா, கோவில்குளம் சந்தி அருகில் அமைந்துள்ள கடைத் தொகுதிக்கு முன்பாக முதியவர் ஒருவரின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

கோவில்புதுக்குளத்தைச் சேர்ந்த 63 வயதுடைய எம். விஜயரத்தினம் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலத்தைத் திடீர் மரண விசாரணை அதிகாரி லா.சுரேந்திரசேகரன் பார்வையிட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# சளி பிடித்து வீட்டில் சிகிச்சை பெற்று வந்த மூன்று மாத பெண் குழந்தை உயிரிழப்பு!

சளி பிடித்து வீட்டில் சிகிச்சை பெற்று வந்த குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

உயிரிழந்த குழந்தை தெமடபிட்டிய, தம்மிக்ககம பகுதியைச் சேர்ந்த எச்.ஜி. தில்ஹானி என்ற 3 மாத பெண் குழந்தை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த குழந்தையின் பெற்றோர் தென்னை நார் ஆலை ஒன்றில் பணிபுரியும் தம்பதிகள் என்று மாரவில பொலிஸார் தெரிவித்தனர்.

குழந்தை சளித்தொல்லையால் பாதிக்கப்பட்டு வீட்டில் சிகிச்சை பெற்று வந்ததும், குழந்தை பெற்றோருடன் வீட்டின் மாடியில் உறங்கிக் கொண்டிருந்ததும், குழந்தையின் மூக்கில் இருந்து இரத்தம், பால் போன்ற திரவம் வடிந்திருப்பதும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# அமைச்சர் சந்திரசேகர் தலைமையில் வெள்ளியன்று யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இ.சந்திரசேகர் தலைமையில் நடைபெறவுள்ள கூட்ட அறிவித்தல் மாவட்ட அரச அதிபரும் ஒருங்கிணைப்புக் குழுவின் செயலாளருமான ம.பிரதீபனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதிய அரசின் முதலாவது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அர்ச்சுனா எம்.பிக்கு...

தம்மை அச்சுறுத்தினார் என்று அர்ச்சுனா எம்.பிக்கு எதிராக வைத்தியர் த.சத்திய மூர்த்தியால் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### கஜேந்திரகுமார் எம்.பியின்...

அவரது சாரதி ஆகியோர் நேற்று பிற்பகல் கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது, கொழும்பு – புத்தளம் வீதியில் போலவத்த சந்தியில் வைத்துப் பெண் ஒருவர் ஜீப் வாகனத்தின் மீது மோதுண்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த யாசகப் பெண் வென்னப்புவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கஜேந்திரகுமார் எம்.பின் வாகன சாரதியான வயதுடைய நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

### கம்பஹாவில் ஒருவர்...

கெளடங்கஹா பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாகோவிட்ட பகுதியைச் சேர்ந்த 39 வயது நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த மேற்படி நபர், கம்பஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### இணங்காவிடின்...

அரசின் தீர்மானத்துக்கு இணங்க முடியாவிடின், அதற்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க நேரிடும் என்றும் ஜனாதிபதி எச்சரித்துள்ளார்.

சந்தையில் நிலவும் அரிசி தட்டுப்பாட்டுக்குத் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க 2 தடவைகள் அரிசி ஆலை உரிமையாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

எனினும், சந்தையில் அரிசி தட்டுப்பாடு மற்றும் நிர்ணய விலையை விட அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யப்படுகின்ற நிலையில் ஜனாதிபதி மீண்டும் ஒருமுறை அரிசி வர்த்தகர்களைச் சந்தித்துக் கலந்துரையாடலை நடத்தியுள்ளார்.



# யாழில் ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குட்பட்ட ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை இன்று திங்கட்கிழமை தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் நிதி அனுசரணையில் இந்தப் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.

“அக்கறையுடன் கூடிய ஊடகம்“ எனும் தலைப்பில் நடைபெற்ற இந்தப் பயிற்சி நெறியில் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குட்பட்ட சுமார் 30 வரையான ஊடகவியலாளர்கள் பங்குபற்றினர்.













# கடற்றொழில் அமைச்சுக்கு புதிய செயலாளர் நியமனம்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் புதிய செயலாளராக சட்டத்தரணி எம். ஏ. எல். எஸ். மந்திரிநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான நியமனக் கடிதத்தை இன்று (09) காலை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, சட்டத்தரணி எம். ஏ. எல். எஸ். மந்திரிநாயக்கவிடம் கையளித்தார்.



# பூஸா சிறைச்சாலையில் இருந்து கைபேசி மற்றும் பொருள்கள் மீட்பு

பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாள உலக கும்பலைச் சேர்ந்தவரும் பிரபல போதைப்பொருள் கடத்தல் காரருமான பொடி லெசி என அழைக்கப்படும் ஜனித் மதுஷங்கவின் அறையில் இருந்து கையடக்கத் தொலைபேசி உட்பட பல்வேறு பொருள்கள் நேற்று (08) மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் பூஸா சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே இந்தப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது, பொடி லெசியின் அறையில் இருந்து மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கையடக்கத் தொலைபேசி, சார்ஜர் , 02 டேட்டா கேபிள் மற்றும் ஹெட்செட் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் மீட்கப்பட்டுச் சிறைச்சாலை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது



# காரைதீவுக்கான குடிதண்ணீர் விநியோகம் 13 தினங்களுக்கு பின் இன்று வழமைக்கு!

( வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவுக்கான குடி தண்ணீர் விநியோகம் 13 தினங்களுக்குப் பின்னர் இன்று (09) திங்கட்கிழமை காலை வழமைக்குத் திரும்பியது.

குழாய்களில் தண்ணீர் சீறிப்பாய்ந்து வந்ததும் மக்கள் அளவிலா மகிழ்ச்சி அடைந்தனர். எனினும் ஆரம்பத்தில் சற்று பழுப்பு நிறத்தில் தண்ணீர் வந்தது. கடந்த 13 நர்களின் பின்னர் முதற் தடவையாக மேலேயுள்ள தண்ணீர் தாங்கிகளிலும் நீர் ஏறியது.

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் உடைத்தெறியப்பட்ட பிரதான நீர்க் குழாய்களின் முக்கிய திருத்த வேலைகள் யாவும் நேற்று முன்தினம் சனிக்கிழமை பூர்த்தியாகியிருந்தன.

கடந்த 13 நாள்களாக நயினாகாட்டுப் பகுதியில் பிரதான குழாய்கள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினரால் இரவு பகலாக திருத்தம் செய்யப்பட்டு வந்தது. அதிர்ஷ்ட வசமாகக் காலநிலையும் ஒத்துழைப்பு நல்கியது.

குழாய்கள் எதிர்வரும் வெள்ள அனர்த்தத்தின்போது சேதமடையாமல் இருக்க உரிய தடுப்பு அணை நடவடிக்கைகள் கடந்த இரு நாள்களாக எடுக்கப்பட்டன. கூடவே பரிசோதனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் ஹைதர்அலி, பொறியியல் பிரிவுப் பொறியியலாளர் தாமோதரம் விநாயகமூர்த்தி, விநியோகம் பராமரிப்பு பிரிவு பொறுப்பதிகாரி எந்திரி பா.மயூரன், காரைதீவு பிரதேச அலுவலரகப் பொறுப்பதிகாரி வி. விஜயசாந்தன், சாய்ந்த மருது பொறுப்பதிகாரி பொறியியலாளர் கஜனி முருகேசு மற்றும் உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக கடமைக்கு அப்பால் சேவை அடிப்படையில் பணிகளில் ஈடுபட்டனர்.

பக்கபலமாக அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம தொடக்கம் ஒரு சில அரசியல்வாதிகளும் ஒத்துழைப்பு வழங்கினர்.

சம்பந்தப்பட்ட தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் ஊழியர்கள் மற்றும் இந்த விநியோகம் வழமைக்குத் திரும்பும்வரை வவுசர்களில் நீரை வழங்கிய அனைத்து தரப்பினருக்கும் மக்கள் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.




# டெங்கு நோயாளர் எண்ணிக்கை நாட்டில் அதிகரித்து வருகின்றது!

## தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவிப்பு

நாட்டில் தற்போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற நிலையில், டிசெம்பர் மாதம் ஆரம்பித்து முதல் வாரத்தில் 858 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்த வருடம் 46 ஆயிரத்து 385 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, மேல் மாகாணத்தில் கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தற்போது 19 ஆயிரத்து 927 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளமை இந்த மாகாணத்திலேயே ஆகும்.

மேலும், வடமாகாணத்தில் யாழ். மாவட்டத்தில் 5,089 நோயாளர்களும் மத்திய மாகாணம் கண்டி மாவட்டத்தில் 4,974 நோயாளர்களும், சப்ரகமுவ மாகாணம், கேகாலை மற்றும் இரத்தின புரி மாவட்டத்தில் 4,623 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதிக்குள் 23 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இந்தியாவுக்கும் தோல்வி

“ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு, மாகாண சபைத் தேர்தலைக் காலதாமதமின்றி மிகவும் விரைவாக நடத்த வேண்டும். அடுத்த வருட இறுதி வரை காத்திருக்காமல், உள்ளூராட்சி சபைத் தேர்தல் நிறைவடைந்த பின், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கு முன்னதாக மாகாண சபைகளை முழு அதிகாரத்துடன் இயங்கச் செய்வது முக்கியமானதாகும்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வலியுறுத்தியிருக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தல் சமயத்திலும் பொதுத் தேர்தல் சமயத்திலும் அநுரகுமார திஸாநாயக்க வழங்கிய உறுதிமொழிகளையே நிறைவேற்றும்படி கோருகின்றார் சுமந்திரன்.

இந்த நடவடிக்கை மூலம் தங்கள் தரப்பின் தேர்தல் கால உறுதிமொழிகளை நிறைவேற்றுவதைதைக் காட்டிலும், தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் தாமும் தமது கட்சியினரும் நீதி, நியாயம் செய்யும் தலைமைத்துவப் பண்பியல்புடனும், நேர்மைப் போக்கில் செயற்படுவதில் பற்றுதியுடனும் உள்ளனர் என்பதை வெளிப்படுத்துவதற்கு ஓர் அமிலச் சோதனையாக கருதி இவ்விடயத்தை அவர்கள் கையாள வேண்டும்.

மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற்று பத்து ஆண்டுகள் கடந்து விட்டன. கடைசியாக ஊவா மற்றும் தென் மாகாணங்களில் 2014 இல் இத்தேர்தல்கள் நடந்தன. 2013 இல் வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலும், 2012 இல் கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

ஆக, தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரை - வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரை இத்தேர்தல்கள் நடத்தப்பட்டு பத்து, பதினொரு ஆண்டுகளாகி விட்டன.

இலங்கைத் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு என்ற பெயரில் இலங்கை - இந்தியத் தரப்புக்கள் செய்து கொண்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தத்தின் பெறுபேறாக அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் மூலம் கொண்டுவரப்பட்டதே மாகாண சபை முறைமையாகும்.

இது தொடர்பான இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அடுத்து, அதனை நடைமுறைப்படுத்துவதற்காக அரசமைப்புக்கு 13 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டபோதே இத்தகைய அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகளை தென்னிலங்கை அரசு தன் விருப்பத்திற்கு ஏற்ப பிடுங்கிக் கொள்ளும், இது உறுதியான ஏற்பாடே அல்ல என்பதை அப்போதைய தமிழர் தலைமை புதுடில்லி அரசுக்கு தெளிவாகவும் திட்டவட்டமாகவும் உறுதிப்படவும் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டி இருந்தது.

ஒப்பந்தத்தில் வெளிப்படுத்தப்பட்ட அதிகாரப் பகிர்வை தொடர்ந்து நிலை நிறுத்துவதற்கான உறுதிப்பாடுகள் - திட்டவட்டமான ஏற்பாடுகள் - நடைமுறையில் இல்லை என்பதையும், இது விடயத்தில் சிங்களத்தை நம்பவே முடியாது என்பதையும் அந்த சமயத்திலேயே - 1987, 88 காலப்பகுதியிலேயே - தமிழர் தரப்பு தெளிவாக எடுத்துரைத்திருந்தது. அந்தக் காரணத்தையும் முன்நிறுத்தியே - அதன் அடிப்படையிலேயே - அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளாமல் விடுதலைப் புலிகள் தரப்பு அதற்கு எதிராக தனது ஆயுதப் போராட்டத்தைத் தொடர்ந்தது.

பத்து வருடங்களுக்கு மேலாக மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்படாமல் அந்த அதிகார பகிர்வு ஏற்பாடு முறைமை குப்பைகள் கூடைக்குள் தூக்கி கிடாசப்பட்டு கிடக்கிறது. இலங்கை - இந்திய ஒப்பந்த காலத்திலேயே தமிழர் தரப்பு எதைச் சுட்டிக்காட்டியதோ அதுதான் இப்போது தொடர்கதையாக நீடிக்கின்றது.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்ற பெயரில் தான் தலையிட்டு, சர்வதேச ஒப்பந்தம் என்ற பெயரில் ஒன்றைக் கொண்டு வந்து, தமிழர் தலையில் வல்வந்தமாகத் திணித்து, அதன் மூலம் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கக் கங்கணம் கட்டிச் செயற்பட்ட இந்தியத் தரப்பு, அந்த அதிகாரப் பகிர்வுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த முடியாத கையாலாகாத் தனத்தில் இருப்பதுதான் இதில் துரதிஷ்டம். மாகாண சபை முறைமை நடைமுறைப்படுத்தப்படாமல் கிடப்பில் கிடப்பது இலங்கையில் இனங்களுக்கிடையிலான சமரசத் திட்டத்துக்குத் தோல்வி மட்டுமல்ல, புது டில்லி ராஜதந்திரத்திற்கும் படுதோல்விதான்....!





# சந்நிதியான் ஆச்சிரமத்தால் வீடு திருத்தத்துக்கு உதவி!

திருகோணமலை 10 ஆம் கட்டை, வேப்பம்குளம் பகுதியை சேர்ந்த எஸ். லியனகே என்பவரின் வீட்டின் கூரை வேலைக் கான செலவாக ஒரு லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

நேற்று (08) ஞாயிற்றுக்கிழமை இந்த உதவித் திட்டத்தை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கினார்.





# சாரணியத்தில் சேவையாற்றிய ஊடகவியலாளருக்குக் கௌரவம்

நீண்ட காலம் சாரணியத்தில் சேவையாற்றிய சிரேஷ்ட ஊடகவியலாளரும், உதவி மாவட்ட சாரண ஆணை யாளருமான எம்.எப்.றிபாஸ் தேசிய சாரணர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் அலரி மாளி கையில் பிரதம சாரண ஆணையாளர் சட்டத்தரணி ஜனப்ரித் பெர்னாண்டோ தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் பிரதமரின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டு சாரணர் விருதை வழங்கி வைத்தனர்.

# மாவா போதைப் பொருளை விற்பனை செய்தவர் கைது!

நுவரெலியா உடப்புசல்லாவ பிரதான வீதியில் விக்ரோரியா பூங்கா பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக உள்ள கடையொன்றில் (08) இரவு மாவா போதைப் பொருளை விற்பனை செய்து வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று நுவரெலியா பொலிஸார் தெரி வித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து குறித்த கடையில் மறைத்து வைத்திருந்த 4 கிலோ 200 கிராம் மாவா போதைப் பொருளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேகநபர் நானுஓயா பகுதியை சேர்ந்த 28 வயதுடையவர் எனவும் அவரை (09) நுவரெலியா மாவட்ட நீதி வான் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சட்ட விரோதமான முறையில் போதைப் பொருள் விற்பனை செய்யப் படுவதாகக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலைத் தொடர்ந்து சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது என்றும் இதன் போதே இந்தச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998






### சிரியாவில் அசாத் ஆட்சியின் வீழ்ச்சி:

# அரபு வசந்தத்தின் முற்றுப்புள்ளியா?

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

*(பல ஆண்டுகளாக உள்நாட்டு போர் நடந்த சிரியாவின் தலைநகரை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளமை அரபு நாடுகளில் மேலும் பதற்றத்தை அதிகரித்துள்ளது. தலை நகரை தாங்கள் கைப்பற்றி விட்டோம் என்று கிளர்ச்சியாளர்கள் குழுவின் தளபதி ஹசன் அப்தில் கனி கூறியுள்ளார். அத்துடன் அசாத்தின் அரசாட்சியை கைப்பற்ற தாம் நீண்ட காலமாக தயார் படுத்தியதாக ஹயத் தஹ்ரீர் அல்-ஷாம் குழுவின் தலைவர் அகமது அல்-ஷரா தெரிவித்துள்ளார்.)*

துனிசியாவில் 2010 ஆம் ஆண்டு அன்றைய ஆட்சியாளருக்கு எதிராக மல்லிகைப் புரட்சி என்ற பெரும் கிளர்ச்சி வெடித்து ஆட்சி மாற்றத்தை நிகழ்த்தியது.

இப்படியாக ஆரம்பித்த அரபு வசந்தம்தான் அரபு நாடுகளிலும், ஆப்பிரிக்க நாடுகளிலும் ஆட்சி அதிகாரத்தை மாற்றியுள்ளது.

**ஆட்சிகளை கவிழ்த்த அரபு வசந்தம்**

அரபு வசந்தங்களாக எகிப்து, லிபியா, ஏமனில் ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்தின. அரபு வசந்தம்தான் அரபு, ஆப்பிரிக்க நாடுகளின் பேரழிவையும் விளைவித்தது.

இறுதியாக சிரியாவில் தொடங்கிய உள்நாட்டு யுத்தம் பாரிய அழிவைச் சந்தித்து நிற்கிறது. இந்த அரபு வசந்தத்தின் தாக்குதலுக்கு அல்ஜீரியா, ஈராக், ஜோர்டான், குவைத், மொராக்கோ, சூடானும் தப்பவில்லை. சவூதி, ஓமன், மேற்கு சகாராவிலும் சாடையாக அரபு வசந்தம் எட்டிப் பார்த்து ஓய்ந்தது.

**அரபு வசந்தமும் அதன் விளைவும்**

அரபு வசந்தமும், அதனுடைய போரின் விளைவுகளும் அந்த பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சியில் 600 பில்லியன் டொலருக்கு மேலான நஷ்டத்தை விளைவித்திருக்கிறது என்று ஐக்கிய நாடுகள் பொருளாதர அவையின் ஆய்வு தெரிவிக்கிறது.

அத்துடன் இந்தப் பிராந்திய நாடுகளின் தேசிய ஒட்டு மொத்த உற்பத்தியில் 6 சதவீதத்துக்கு இந்த இழப்பு சமம் என்று ஐ.நாவின் இந்தப் புள்ளி விவரங்கள் குறிப்பிடுகின்றன. போர்களும், பாதுகாப்பின்மையும், சுற்றுலா துறையால் கிடைக்கின்ற வரவை பாதித்து, வெளிநாட்டு முதலீட்டையும் தடுத்து, கடன், வேலை வாய்ப்பின்மை மற்றும் ஊழல் போன்ற பொருளாதார பிரச்சினைகளை மோசமாகியுள்ளதாக கூறப்படுகிறது.

**சிரியாவில் ஆட்சி மாற்றம்**

போர் மேகம் சூழ்ந்துள்ள மத்திய கிழக்கில் தொடர் பதற்றம் அதிகரித்து வருகிறது. சிரியா நாட்டில் 2011 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டு போர் நடந்து வருகிறது. மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என ஐ.நா. அமைப்பு தெரிவிக்கின்றது. இந்த எண்ணிக்கையை விட இரு மடங்காக ஆறு லட்சம் என சிரியாவின் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவிக்கின்றது.

சிரியாவில் கடந்த 2011 ஆம் ஆண்டில் ஜனாதிபதி அசாத்துக்கு எதிராக டெரா பிராந்தியத்தில் உள்நாட்டு கிளர்ச்சி உருவானது. அது மேலும் பல பிராந்தியங்களுக்கும் பரவிய நிலையில், ஆட்சியாளர்களுக்கு எதிராக கிளர்ச்சிக்குழு பலவும் உருவானது.

பல்வேறு கிளர்ச்சி குழுவுக்கும், சிரியா அரசுக்கும் இடையே கடந்த 14 ஆண்டுகளாக உள்நாட்டு போரில் ஏராளமான சிரிய மக்கள் அகதிகளாக பல்வேறு உலக நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

**பொருளாதாரச் சரிவும் நெருக்கடியும்**

நீண்ட கால யுத்தம் சிரியாவை சீரழித்து, அதன் பொருளாதாரத்தை முடக்கி, உள்கட்டமைப்பை அழித்து, லட்சக்கணக்கான மக்களை இக்கட்டான சூழ்நிலையில் தள்ளியுள்ளது. சிரியாவில் போருக்கு முன்பு இருந்த 2.2 கோடி மக்கள் தொகையில், பாதிக்கும் மேற்பட்டவர்கள் இடம்பெயர்ந்து உள்ளதாக ஐ.நா. கூறியுள்ளது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த 68 லட்சம் மக்களில், 20 லட்சத்துக்கும் அதிகமானோர் மிகக் குறைவான அடிப்படை வசதிகளுடன் நெரிசலான முகாம்களில் வாழ்கின்றனர். அதனை விட கூடுதலாக 60 லட்சம் பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இவற்றை மறுகட்டமைப்பு செய்வதற்குத் தெளிவான பாதை இல்லாமல், இந்தப் போர்ச்சூழல் அடிப்படைத் தேவைகளுக்கும் நெருக்கடியை உருவாக்கியுள்ளது.

பெரும்பாலும் லெபனான், ஜோர்டான் மற்றும் துருக்கியில், 53 லட்சம் அகதிகள் உள்ளனர். வடமேற்கு சிரியாவில் ஏற்கெனவே 20 லட்சம் மக்கள் முகாம்களில் வாழ்கின்றனர்.

இடம் பெயர்ந்தவர்களில் பலர் உதவி பெறும் நம்பிக்கையில் அயல் நாடுகளுக்கு அகதிகளாக செல்கிறார்கள். ஆனால் உள்நாட்டில் இடம்பெயரும் அதிகளவிலான மக்களைப் பாதுகாக்கும் சூழல் அங்கு இல்லை என்று கூறப்படுகிறது.

தொடர்ச்சி▼





# அரபு வசந்தத்தின் முற்றுப்புள்ளியா?

**தொடர்ச்சி▲**

இந்தச் சமீபத்திய மோதலுக்கு முன், 2023 ஆம் ஆண்டு நிலவரப்படி, சிரியாவில் 1.53 கோடி மக்கள் அடிப்படை உதவிகள் தேவைப்படும் நிலையில் இருந்தனர். 1.2 கோடி மக்கள் கடுமையான உணவுப் பஞ்சத்தை எதிர்கொள்ளும் நிலையில் இருந்தனர்.

மேலும் பெப்ரவரி 2023 இல் துருக்கியின் காசியான்டெப் அருகே ஏற்பட்ட நிலநடுக்கம், நிலைமையை இன்னும் மோசமாக்கியது. தற்போதய மோதலின் விளைவாக சிரியாவில் 5,900க்கும் மேற்பட்ட மக்கள் பலியாகினர். 88 லட்சம் மக்கள் இதனால் பாதிக்கப் பட்டனர்.

எண்ணெய் வயல்கள் மற்றும் முக்கிய வர்த்தகப் பாதைகள் மீதான கட்டுப்பாடு உள்ளிட்ட பொருளாதார நலன்களும் தொடர்ந்து பதற்றங்களைத் தூண்டி வருகின்றன. இவற்றோடு, மக்களின் அடிப்படைத் தேவைகள் பிரச்சினையும் இணைந்ததால், நாட்டில் அதிருப்தியான கடும் சண்டை நிலவியது.

**54 ஆண்டு அசாத் ஆட்சி**

1970களின் தொடக்கத்தில் இருந்து கடந்த 54 ஆண்டுகளாக அசாத் குடும்பம் சிரியாவில் ஆட்சி புரிந்து வந்துள்ளது. நாட்டை விட்டு தப்பி ஓடிய ஜனாதிபதி பஷார் அல்-அசாத் தலைமையிலான அரசு இறுதி வரை ஆட்சியில் இருந்தது.

கடந்த சில ஆண்டுகளாக பெரிய அளவில் வன்முறை எதுவும் ஏற்படாத நிலையில், கடந்த வாரம் மீண்டும் போர் வெடித்தது. அசாத் தலைமையிலான அரசுக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் போரில் ஈடுபட்டனர். இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட நிலையில் இந்த கிளர்ச்சி வெடித்தது.

சிரியாவில் உள்ள அலெப்போ மற்றும் ஹமா பகுதிகளை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றிய நிலையில், தலைநகர் டமாஸ்கஸ் நோக்கி முன்னேறி சிரியாவை கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளனர்.

**அல்-கொய்தா கிளை அமைப்பான கிளர்ச்சி படை**

சிரியாவுக்கான அல்-கொய்தா கிளை அமைப்புடன் தொடர்பிலுள்ள ஹயத் தஹ்ரீர் அல்-ஷாம் அமைப்பின் தலைவர் அபு முகமது தற்போது போரை முன்னெடுத்துள்ளார். ஜனாதிபதி பஷார் அல்-அசாத்தின் ஆட்சிக்கு முடிவு ஏற்படுத்த வேண்டும் என்பதே தங்களுடைய இலக்கு என்றும் தெரிவித்துள்ளார்.

தற்போது சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸ் நோக்கி கிளர்ச்சியாளர்கள் முன்னேறி ஆட்சியை பிடித்துள்ளதால், இந்நகரை சுற்றிலும் குவிக்கப்பட்ட வீரர்களை அரசு வாபஸ் பெற்றுள்ளது எனவும்,அரச படைகள் முற்றாக சரணடைந்து விட்டன.

அத்துடன் டமாஸ்கஸின் மோவாதமியா அல்-ஷாம் மற்றும் தரயா உள்ளிட்ட பல்வேறு புறநகர் பகுதிகளில் இருந்தும், மிஜ்ஜே இராணுவ விமான நிலையத்தில் இருந்தும் கூட அரசு படைகள் வாபஸ் பெறப்பட்டு விட்டன என கூறப்படுகிறது.

**அசாத் தப்பி ஓட்டம்**

சிரிய அதிபராக இருந்த பஷார் அல் அசாத், அதிபர் மாளிகையில் இருந்து தப்பி சென்று விட்டார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. தலைநகர் டமாஸ்கஸில் இருந்து ஜனாதிபதி அசாத் வெளியேறி விட்டார் என்றும், அவர் சென்ற விமானமொன்று ரேடார் திரையிலிருந்து மாயமாகியுள்ளதாக சில செய்திகள் சொல்கின்றன.

இதேவேளை, ரஷ்யா உள்ளிட்ட சில நாடுகள், கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் சிரியா செல்வது என்பது ஏற்று கொள்ள முடியாதது என கூறி வருகிறது. இதனால், மத்திய கிழக்கில் பதற்ற நிலை காணப் படுகிறது.

இதனால் ஆப்கானிஸ்தானில் தாலிபன் ஆட்சி அமைந்தது போல, சிரியாவிலும் கிளர்ச்சியாளர்களின் ஆட்சி விரைவில் அமலுக்கு வரலாம் என கூறப்படுகிறது.

**ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் குழு யார்?**

இஸ்லாமிய அரசு என அழைத்துக் கொள்ளும் குழுவின் தலைவர் அபு பக்கர் அல்-பாக்தாதியும் ஜபத் அல்-நுஸ்ராவின் உருவாக்கத்தில் ஈடுபட்டார். 2011 இல் அல் கொய்தாவின் நேரடி இணைப்பாக 'ஜபத் அல்-நுஸ்ரா' என்ற வேறு பெயரில் 'ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம்' அமைக்கப்பட்டது.

ஆனால் அதன் அடிப்படை வாத கொள்கையை விட, 'ஜிஹாதி சித்தாந்தம்' அக்குழுவின் உந்து சக்தியாக கருதப்படுகிறது. சிரியா அதிபர் அசாத்துக்கு எதிரான குழுக்களில், தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய பாரிய இராணுவ குழுவாக இது கருதப்பட்டது.

2016 ஆம் ஆண்டில், இக்குழுவின் தலைவரான அபு முகமது அல்-ஜவ்லானி, அல் கொய்தாவுடன் உள்ள தொடர்பைப் பகிரங்கமாகப் பிரிந்து, ஜபத் அல்-நுஸ்ராவை கலைத்தார். பின்னர் ஒரு புதிய அமைப்பை நிறுவினார்.

சில காலம் கழித்து, இதே போன்ற பிற குழுக்களுடன் இணைந்தபோது 'ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம்' என்ற பெயரை இக்குழு உருப்பெற்றது.

மேற்குலகின் பிராந்திய, பொருளாதார நலன்களுக் காகவே அரபு வசந்தங்கள் உருவாகி பல பேரழிவையும் விளைவித்தது எனும் குற்றச்சாட்டும் உள்ளது. லிபியா, ஏமனில் ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்தது எனக் கூறப் பட்டாலும் அரபு வசந்தம் தான் அரபு, ஆப்பிரிக்க நாடுகளின் பேரழிவையும் விளைவித்தது.



# பெங்கால் புயலும் மக்கள் எதிர்கொண்ட சவால்களும்!

வர்ஷனா வரதராசா,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

புவியியல் அமைப்பு மற்றும் வானிலை மாறுபாடுகள் காரணமாக, இலங்கை தீவு பெரும் புயல்களும் இயற்கை ஆபத்துகளும் அடிக்கடி நேரிடும் இடமாக விளங்குகிறது. பெங்கால் வளைகுடாவில் உருவாகும் புயல்கள் பெரும்பாலும் இலங்கை மக்களை பலவிதமான சவால்களுக்கு உள்ளாக்குகின்றன.

இக்கட்டுரையில், பெங்கால் புயலால் ஏற்படும் பாதிப்புகள், மக்களின் எதிர்நோக்கிய சவால்கள், மற்றும் நிவாரண முயற்சிகள் குறித்து ஆராயப்படுகிறது.

பெங்கால் புயலின் தாக்கங்களாக, பெங்கால் வளைகுடாவில் உருவாகும் புயல்கள் வெப்பமான மண்டல காற்றின் வலிமையினால் தீவிரமாகும். இவை பெரும்பாலும் இலங்கை வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் கடுமையான புயற்காற்று, கனமழை மற்றும் வெள்ளப்பெருக்காக வெளிப்படுகின்றன.

பயிர்ச் சேதம் விவசாயம் இலங்கையின் முதன்மை தொழிலாகும். பெங்கால் புயலால் தோட்டங்கள், நெற்பயிர்கள், மற்றும் தேயிலை தோட்டங்கள் பெருமளவில் சேதமடைந்தன.

விவசாயிகள் கடன் சுமைகளில் சிக்கிக்கொள்ளும் நிலை அதிகரிக்கின்றது,

குடியிருப்புகளின் அழிவு குறைந்த பொருளாதாரத்தைச் சார்ந்த மக்கள் வாழும் தாழ்வான பகுதிகளில் வீடுகள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகின. தற்காலிகக் குடியிருப்புகளும் மழையால் அழிந்தன, சமூகத் தளவாட அமைப்புகள் பாதிப்பு புயலின் தாக்கத்தால் சாலைகள், பாலங்கள், மற்றும் மின்சார ஒழுங்குகள் தடைபட்டன.போக்குவரத்து முறைகள் பாதிக்கப்பட்டதால், நிவாரணம் நேர்முகமாகக் கிடைக்க முடியாமல் போனது.

### பல்வேறு சமூக பிரச்சினைகள்

பெரும் மக்கள் தொகை தற்காலிக தங்குமிடங்களில் அடைக்கலமடைந்தனர். இதனால் நோய்கள் பரவுவதற்கான சூழ்நிலை உருவாகியது. சுகாதார வசதிகளின் குறைபாடு மிகுந்த சிக்கல்களைக் கூட்டியது.

அடுத்து மக்கள் எதிர்நோக்கிய சவால்களாக, பொது மக்களின் வாழ்வாதாரத்தை ,ழந்தனர்,புயலால் வாழ்வாதாரத்தை ,ழந்த மக்கள், குறிப்பாக மீனவர்கள் மற்றும் விவசாயிகள், மீண்டு எழுவதற்கு காலம் தேவபடுகிறது, மீனவர்களுக்கு கடலுக்கு செல்ல முடியாத நிலை தற்காலிக பொருளாதாரக் குறையை ஏற்படுத்தி உள்ளது.

நீர் மாசு மற்றும் சுகாதார பிரச்சனைகள் வெள்ளப் பெருக்கு நீரின் மாசுபட்ட தன்மை தாகமிகும் மக்களின் வாழ்க்கையை இன்னும் சிக்கலாக்கியது. தொற்று நோய்கள், குறிப்பாக டெங்கு அதிகரித்துள்ளது. சமூக அமைதி மற்றும் ஒருமிப்புச் சிக்கல்கள் புயலால் வீடுகளை இழந்தவர்கள் தற்காலிகமாக நாடு விட்டு அகதிகளாக மாறுவதற்கும் நேரிடுகிறது. இதனால் சமூகத்தில் இனப் பிரச்சினைகள், வறுமை, மற்றும் குற்றச்செயல்களின் அதிகரிப்பு ஏற்படுகிறது.

மாணவர்களின் கல்வி பாதிப்பு வெள்ளத்தால் பள்ளி கட்டடங்கள், பல்கலைகழகங்கள் சேதமடைந்தும் கல்வி நடைமுறைகள் மந்தமடைந்தும் மக்களின் எதிர்காலத்தைப் பாதிக்தித்தது.

### மீட்பு மற்றும் நிவாரண முயற்சிகள்

அரசின் பங்களிப்பாலும் தனிநபர்களின் பங்களிப்பாலும் புயலில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரண மையங்கள் அமைத்து மக்களுக்கு உணவு, குடிநீர் மற்றும் தங்குமிடம் வழங்கப்பட்டன. நடளாவிய நிவாரண அமைப்புகள் உணவுப் பொருள்கள், மருத்துவ உதவிகள் மற்றும் பண உதவிகளை வழங்குகின. குறைந்த காலத்தில் மீட்பு நடவடிக்கைகளை எடுத்து வரும் வினையாற்றும் முயற்சிகள். இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்ள நடவடிக்கைகள் புயலின் பாதிப்பு சார்ந்து வலுவான திட்டமிடல்களும் ஆழ்ந்த ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. புயல் பாதிப்புகளை முன்கூட்டியே அறிவிக்க வானிலை கணிப்பு மையங்கள் மேம்படுத்தப்பட்டன.

பெங்கால் புயல் போன்ற இயற்கை அனர்த்தங்கள் இலங்கை மக்களுக்கு எதிர்பாராத பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன. இதனால் அவர்கள் சமுதாயத்தில் சவால்களை எதிர்கொண்ட போதிலும், தன்னம்பிக்கையுடன் வாழ்க்கையை முன்னேற்றி வருகிறார்கள். செயற்கை அனர்த்தங்களை குறைக்கும் அரசு மற்றும் சமூக அமைப்புகளின் திட்டமிடல்களால், எதிர்காலத்தில் புயல்களின் தாக்கத்தை குறைத்தல் சாத்தியமாகும். மாற்றங்களை ஏற்று எதிர்கொள்வதன் மூலம் மட்டுமே இலங்கை மக்கள் புதிய பாதையை கண்டுபிடிக்க முடியும்.

# 2026 இல் மக்கள் விஜய்யை ஆட்சியில் அமர வைப்பார்கள்

## த.வெ.க. நம்பிக்கை



அச்சத்திலும், பதட்டத்திலும் உள்ள தி.மு.கவினர் எம்.ஜி.ஆரை போல விஜய்யையும் கூத்தாடி என ஏளனம் பேசுகிறார்கள் என தமிழக வெற்றிக் கழகம் விமர்சித்துள்ளது.

இது குறித்து தமிழக வெற்றிக் கழக மாநில செய்தித் தொடர்பாளர் எஸ். ரமேஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"அம்பேத்கர் புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட த.வெ.க. தலைவர் விஜய், மத்திய மற்றும் மாநில ஆட்சியின் அவலங்கள் குறித்து பேசினார். துணை முதல்வர் உதயநிதி இதை பற்றி பேசும் போது சினிமா செய்திகள் பார்ப்பதில்லை என்று பதில் கூறியிருப்பது அவரது அரசியல் புரிதலின்மையை காட்டுகிறது.

ஒட்டுமொத்த சினிமாவை கையில் வைத்துக்கொண்டு திரையுலகில் ஆதிக்கம் செலுத்தி வரும் உதயநிதி, சமூகநீதியை நிலைநாட்டிய அம்பேத்கர் பற்றிய புத்தக வெளியீட்டு விழாவை சினிமா செய்திகள் எனக் கூறியிருப்பது அம்பேத்கரை அவமதிக்கும் கருத்தாகும். ஒரு மக்கள் பிரதிநிதி இப்படி பேசுவதென்பது ஏற்க முடியாத செயல்.

அமைச்சர்களின் கருத்தியல் அற்ற விமர்சனம், இணையதள தாக்குதல்கள், ஊடகங்களில் பத்திரிக்கையாளர்கள் என்ற போர்வையில் ஒரு சிலரை கொண்டு நகைச்சுவையான உண்மைக்கு புறம்பான விஷயங்களை பேச வைப்பது போன்ற செயல்களை செய்வதன் மூலம் தி.மு.க. எங்கள் தலைவரின் செயல்பாட்டால் எந்தளவு அச்சத்திலும் பதட்டத்திலும் உள்ளது என்பது வெளிப்படையாக தெரிகிறது.

எம்.ஜி.ஆரை கூத்தாடி என்று ஏளனம் செய்த தி.மு.கவை மக்கள் 10 ஆண்டுகள் அதிகாரத்தில் இருந்து ஒதுக்கி வைத்தார்கள். இன்று மீண்டும் அதே ஏளனத்தை கட்டவிழ்த்து விடும் தி.மு.கவை தமிழக மக்கள் 2026 சட்டப்பேரவை தேர்தலில் ஆட்சி அதிகாரத்தில் இருந்து நீக்கி த.வெ.க. தலைவரை தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சியில் அமர வைப்பார்கள்." – என்று குறிப்பிட்டுள்ளார்.

# விஜய் மணிப்பூருக்கு என்னோடு வரத் தயாரா?

## அண்ணாமலை கேள்வி





"விஜய் மணிப்பூர் செல்ல தயாராக இருந்தால் அவரோடு நானும் செல்வதற்கு தயாராக இருக்கிறேன். மணிப்பூரில் என்ன நடக்கிறது, அங்கிருக்கும் பழங்குடி மக்கள் யார்? காங்கிரஸ் ஆட்சிகாலத்தில் அங்கு உயிரிழந்தோர் எத்தனை பேர்? தற்போது உயிரிழந்தோர் எத்தனை பேர்? போன்ற பொது அறிவு தகவல்களை விஜய் தெரிந்து கொள்ள வேண்டும்."

– இவ்வாறு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

"அம்பேத்கர் புத்தகத்தை வெளியிட வேறு ஆளே கிடைக்கவில்லையா? அந்த புத்தகத்தை பெறுக் கொண்ட ஆனந்த் டெல்டும்டே ஒரு நகர்ப்புற நக்சல். தமிழக அரசியல் எந்த திசையை நோக்கி செல்கிறது என்பது கேள்விக்குறி.

திருமாவளவன் அந்த நிகழ்ச்சியில் பங்கேற்க மாட்டேன் என்று புறக்கணித்து விட்டார். ஆனால் அக்கட்சியின் துணை பொதுச் செயலாளர் அந்த நிகழ்ச்சிக்கு போயிருக்கிறார் என்றால் கட்சி திருமாவளவன் கையில் இருக்கிறதா அல்லது துணை பொதுச் செயலாளர் கையில் இருக்கிறதா?

விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு ஒரு தலைவரா அல்லது இரண்டு தலைவர்களா? கூட்டணியில் இருக்கும் ஒரு கட்சியை பற்றி பேசிய பிறகு ஒரே கட்சியில் இருவரும் இருக்கிறார்கள் என்றால் விசிக திருமாவளவன் கையில் இல்லை. தனது கட்சிக்கு நிதி வழங்கும் முக்கிய நபர் மீது கைவைக்க திருமாவளவன் தயாராக இல்லை. திமுக கூட்டணி எப்படி இருக்கிறது என்பதை இது காட்டுகிறது.

அம்பேத்கரை வைத்து தமிழகத்தில் அரசியல் வியாபாரம் நடக்கிறது. விஜய் மணிப்பூர் செல்ல தயாராக இருந்தால் அவரோடு நானும் செல்வதற்கு தயாராக இருக்கிறேன். மணிப்பூரில் என்ன நடக்கிறது, அங்கிருக்கும் பழங்குடி மக்கள் யார்? காங்கிரஸ் ஆட்சிகாலத்தில் அங்கு உயிரிழந்தோர் எத்தனை பேர்? தற்போது உயிரிழந்தோர் எத்தனை பேர்? போன்ற பொது அறிவு தகவல்களை விஜய் தெரிந்து கொள்ள வேண்டும்." – என்றார்.

# தென் கொரியாவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் கைது



தென் கொரியாவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் கிம் யோங்-ஹியூன் நேற்று ஞாயிற்றுக் கிழமை கைது செய்யப்பட்டார்.

கடந்த வாரம் இராணுவச் சட்டத்தை விதிப்பதற்கான ஜனாதிபதி யூன் சுக் இயோலின் முடிவில் அவர் பங்கெடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பின்னணியில் இந்த கைது அமைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தென் கொரிய ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்வதற்கான எதிர்க்கட்சி தலைமையிலான முயற்சி, எதிர்ப்புகள் உட்பட யூனின் அரசியல் எதிரிகளின் குற்றச்சாட்டுகள் குறித்து வழக்குரைஞர்கள் தங்கள் விசாரணையைத் தொடங்கும் போது கைது செய்யப்பட்ட முதல் நபர் கிம் ஆவார்.

தென்கொரியாவின் தேசிய சட்டமன்றம் ஜனாதிபதி யூன் சுக் யோலின் இராணுவச் சட்ட மூலத்தை தீர்மானமாக இரத்து செய்ததை அடுத்து, நாடு கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஒரு வியத்தகு அரசியல் எழுச்சியைக் கண்டது.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக தென் கொரியாவின் முதல் இராணுவச் சட்டத்தை திணிக்க யூனின் அதிர்ச்சி முயற்சி, அதன் நவீன ஜனநாயக வரலாற்றில் நாட்டை அதன் ஆழ்ந்த கொந்தளிப்பில் ஆழ்த்தியது.

இது நாடு முழுவதும் பரவலான கோபம் மற்றும் எதிர்ப்புக்களை தூண்டியதுடன், ஆசியாவின் நான்காவது பெரிய பொருளாதாரத்தில் பல தசாப்தங்களில் மிகப்பெரிய அரசியல் நெருக்கடியையும் ஏற்படுத்தியது.

தென் கொரியாவின் முக்கிய எதிர்க்கட்சி, ஜனாதிபதி யூனை உடனடியாக இராஜினாமா செய்ய வேண்டும் அல்லது பதவி நீக்கத்தை எதிர்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியது.

# டொலரை பலவீனப்படுத்தும் எண்ணம் இந்தியாவுக்கு இல்லை: எஸ் ஜெய்சங்கர்



பிரிக்ஸ் நாடுகளுக்கு 100 சதவீத வரி விதிக்கப்போவதாக அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்பின் மிரட்டலுக்கு பதிலளித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், அமெரிக்க டொலரை பலவீனப்படுத்தும் எண்ணம் இந்தியாவுக்கு இல்லை என்று கூறினார்.

கட்டார் தலைநகர் தோஹாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் இது தொடர்பில் உரையாற்றிய அவர், பிரிக்ஸ் நாணயத்தை வைத்திருக்கும் திட்டம் எங்களிடம் இல்லை என்றும், அமெரிக்கா இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக பங்காளியாகும்.

இந்த விவகாரத்தில் பிரிக்ஸ் அமைப்பில் உள்ள நாடுகள் ஒரே மாதிரியான நிலைப்பாட்டை கொண்டிருக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

அமெரிக்க டொலருக்கு பதிலாக புதிய நாணயத்தை உருவாக்கவோ அல்லது வேறு எந்த நாணயத்தையும் திரும்பப் பெறவோ மாட்டோம் என்று பிரிக்ஸ் நாடுகளிடம் உறுதிமொழி கோரி டொனால்ட் ட்ரம்ப் தனது சமூக தளத்தில் பதிவிட்ட ஒரு வாரத்திற்குப் பின்னர் ஜெய்சங்கரின் இந்த பதில் வந்துள்ளது.

ஜனவரி 2025 இல் வெள்ளை மாளிகைக்கு மீண்டும் திரும்பத் தயாராக உள்ள குடியரசுக் கட்சித் தலைவர், அமெரிக்க டொலரில் இருந்து விலகிச் செல்லும் திட்டங்களைத் தொடர்ந்தால், பிரிக்ஸ் நாடுகள் 100 சதவீத வரிக் கட்டணங்களை எதிர்கொள்வார்கள் என்றும் எச்சரித்திருந்தார்.

கடந்த மாதம் ரஷ்யாவில் நடந்த பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் போது, அதன் உறுப்பு நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் அமெரிக்க டொலருக்கு மாற்றாக வேறு நாணயத்தை பயன்படுத்துவதில் கவனம் செலுத்தியிருந்தன.

பிரிக்ஸ் குழுவில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா மற்றும் பிற நாடுகள் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 03

# கனடா முரசு

திங்கட்கிழமை 09/12/2024

## இந்திய மாணவர் சுட்டுக் கொலை

கனேடிய நகரான எட்மண்டனில் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்பில் 20 வயதான இந்திய மாணவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர் 02





# ட்ரூடோ அரசுக்கு எதிராக மீண்டும் நம்பிக்கையில்லாப் பிரேரணை

## இன்று வாக்கெடுப்பு

**பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் அரசாங்கத்திற்கு எதிராக மற்றும் ஒரு நம்பிக்கை இல்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.**

**கான்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பியே பொலியேவ் இந்த நம்பிக்கை இல்லாப் பிரேரணையை நாடாளுமன்றில் முன்வைத்துள்ளார்.**

கூட்டணி கட்சியான என்.டி.பி கட்சி லிபரல் கட்சிக்கான ஆதரவினை வாபஸ் பெற்றுக்கொள்வதாக வெளியிட்ட அறிவிப்பின் அடிப்படையில் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

என்.டி.பி கட்சியின் தலைவர் ஜக்மீட் சிங் வெளியிட்ட கருத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை பொலியேவ் சமர்ப்பித்துள்ளார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான வாக்கெடுப்பு இன்று திங்கட்கிழமை நடைபெற உள்ளது.

# மோசடியில் சிக்கி பெருந்தொகை பணத்தை இழந்த கனடியர்கள்

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட மோசடியில் சிக்கி 2 கனடிய பிரஜைகள் பெருந்தொகை பணத்தை இழந்துள்ளனர்.

ஒன்றாரியோ மாகாணத்தைச் சேர்ந்த இருவர் இவ்வாறு பெருந்தொகை பணத்தை இழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

செயற்கை நுண்ணறிவைக் கொண்டு இடப்பட்ட சமூக ஊடக பதிவுகள் மற்றும் விளம்பரங்களை நம்பி இவர்கள் ஏமாந்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இருவரும் மொத்தமாக 2 லட்சத்து 30 ஆயிரம் டொலர்கள் இழந்துள்ளனர்.

கிரிப்டோ கரன்சி முதலீட்டு திட்டத்தில் இணைத்துக் கொள்வதாக தெரிவித்து இந்த மோசடி இடம் பெற்றுள்ளது.

உலகின் முதல்நிலை செல்வந்தர்களில் ஒருவரான எலோன் மாஸ்க் போன்றவர்கள் தோன்றி முதலீடு செய்யுமாறு கூறும் காணொளிகள் வெளியிடப்பட்டு ஏமாற்றப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.




கிரிப்டோ நாணயங்களில் முதலீடு செய்யுமாறு கூறப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

உலகப் பிரபலங்கள் பரிந்துரை செய்வது போல் செயற்கையின் நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி டீப் ஃபேக் காணொலிகள் வெளியிடப்படுவதாகவும் இதன் ஊடாக இவ்வாறு பலர் மோசடிகள் சிக்கிக் கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.




# அமெரிக்க பொருள்களை புறக்கணிக்கும் கனடியர்கள்

அமெரிக்க பொருள்களை கொள்வனவு செய்வதனை கனடியர்கள் தவிர்த்து வருகின்றனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பு ஒன்றின் போது இந்த விடயம் தெரிய வந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அண்மையில் அமெரிக்க புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கனடாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 வீத வரி விதிக்கப்படும் என அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பை தொடர்ந்து கனேடியர்கள் அமெரிக்க பொருள்களை கொள்வனவு செய்வதனை தவிர்த்து வருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

நானோஸ் ஆய்வு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பு மூலம் இந்த விடயம் தெரியவந்துள் ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வரி விதிக்கப்பட்டால் அமெரிக்க பொருள்களை கொள்வனவு செய்வது தொடர்பான தங்களது தீர்மானங்களில் மாற்றம் செய்ய நேரிடும் என கருத்துக் கணிப்பில் பங்குபற்றிய கனடியர்கள் தெரிவித்துள்ளனர்.



## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில் இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு, முதல் நிலை கொலைக் குற்றம் சாட்டப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் வேறு எவருக்கும் தொடர்பு இருப்பதாக தாம் நம்பவில்லை என விசாரணை அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.சந்தேக நபர்களை கைது செய்த போது, அவர்களிடம் ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்பட வில்லை என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12.30 மணியளவில் நடந்த துப்பாக்கிச் சூட்டுக்குப் பின்னர், காவலாளியாகப் பணிபுரிந்த ஹர்ஷந்தீப் சிங் என்ற மாணவர் உயிரிழந்துள்ளார்.கொலைக்கான காரணத்தை பொலிஸார் இன்னும் கண்டறியவில்லை, மேலும் உயிரிழந்த மாணவரின் பிரேத பரிசோதனைகளை இன்று மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.





# கனடாவில் அபகரிக்கப்பட்ட பெருந்தொகை வாகனங்கள் மீட்பு

கனடாவின் ரொறன்ரோ பெரும் பாக பகுதியில் அபகரிக்கப்பட்ட பெருந்தகை வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சுமார் நான்கு மில்லியன் டொலர் பெறுமதியான வாகனங்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

ரொறன்ரோவின் வாட்டர் லூ தொகுதியில் இந்த வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த நவம்பர் மாதம் 23 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்த வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த வாகன கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளன.

அபகரிக்கப்பட்ட வாகனங்கள் உதிரிபாகங்களாக பிரிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 52 அதி சொகுசு வாகனங்களை அதிகாரிகள் மீட்டுள்ளனர்.



# கனடாவில் தடை செய்யப்பட்ட ஆயுதம் வைத்திருந்தவருக்கு சிறை

கனடாவில் தடை செய்யப்பட்ட ஆயுதம் ஒன்றை வைத்திருந்த பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு ஐந்து ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நபர் அமெரிக்க கனடியே எல்லை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

ரசல் வெர்னோன் மேஜர் என்ற நபர் அமெரிக்காவிலிருந்து கனடா திரும்பிக் கொண்டிருந்தபோது எல்லை பாதுகாப்பு அதிகாரிகள் சோதனையை நடத்தியுள்ளனர். கடந்த 2022 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இந்த சம்பவம் இடம்பெற் றுள்ளது.

கனடிய எல்லை பாதுகாப்பு அதிகாரிகள் வாகனத்தை சோதனையிட்ட போது சட்டவிரோத ஆயுதம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது மேலும் ஒரு தொகுதி தோட்டாக்களும் மீட்கப்பட்டுள்ளன.

சட்டவிரோதமாக ஆயுதத்தை நாட்டுக்குள் கடத்தியதாக மேஜர் மீது குற்றம் சுமத்தி வழக்கு தொடக்கம் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணைகளின் அடிப்படையில் மேற்படி நபருக்கு கனடிய நீதிமன்றம் 5 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்துள்ளது.